இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 279 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – வைகாசி 06 – சனிக்கிழமை 20 மே 2023 – கோவை★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 279 : Thiruvalluvar Year - 2054 - Vaikasi 06 - Saturday 20 May 2023 - Kovai★★ 12 Pages ₹ 5.00

## 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வு! 91.39% பேர் தேர்ச்சி!

சென்னை, மே 20-

தமிழகத்தில் 10ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் வெளியிடப் பட்டுள்ளது. தேர்வு முடிவுகளை தேர்வுத் துறை இயக்குநர் சேது ராம வர்மா வெளியிட்டார். 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் மொத்தம் 91.39% பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதில் மாணவிகள் தேர்ச்சி விகிதம் 94.66%, மாணவர்கள் தேர்ச்சி விகிதம் 88.16% ஆக உள்ளது.

10ம் வகுப்பு பொதுத் தேர்வு தேர்ச்சி விகிதத்தில் மாநில அளவில் பெரம்பலூர் மாவட்டம்(97.67%) முதலிடத்தில் உள்ளது. 2வது இடத்தை சிவகங்கையும் (97.53%), 3வது இடத்தை விருதுநகர் மாவட்டமும்(96.22%) பிடித்துள்ளது. 10ம் வகுப்பு பொதுத்தேர் வெழுதிய 264 சிறைவாசிகளில் 112 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

www.tnresults.nic.in, www.dge.tn.gov.in என்ற இணையதளங்களில் சென்று தேர்வு முடிவுகளை மாணவர்கள் அறிந்து கொள்ளலாம்.

மேலும் மாணவர்கள் படித்த பள்ளிகளில் சமர்ப்பித்த உறுதி மொழிப் படிவத்தில் குறிப்பிட்டு இருந்த செல்போன் எண்ணுக்கும், தனித்தேர்வர்கள் ஆன்லைனில் விண்ணப்பிக் கும் போது சமர்ப்பித்த செல்போன் எண்ணுக்கும் மதிப்பெண்கள் குறுஞ்செய்தி வழியாக அனுப்பப்பட உள்ளன.

## தொ.மு.ச. பொன்விழா!

# தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்போம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, மே 20-**

**“தொழிலாளர்களின் உரிமைகளை என்றும் பாதுகாப்போம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொ.மு.ச. பொன்விழாவில் உரையாற்றும்போது உறுதிபடக் கூறினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.5.2023) சென்னை, கலைவாணர் அரங்கத்தில், தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் 25வது பொதுக்குழுக் கூட்டம் மற்றும் பொன் விழா மாநாட்டில் கலந்து கொண்டு ஆற்றிய உரை வருமாறு:-

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையினுடைய 25வது பொதுக் குழு மற்றும் பொன்விழா நிகழ்ச்சி மூன்று நாட்களாக நடைபெற்று அதனுடைய நிறைவு நிகழ்ச்சியாக இந்த நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நிகழ்ச்சியில் நிறைவாக நானும் பங்கேற்று உங்களிடத்தில் சில கருத்துக்களை எடுத்து வைக்கக்கூடிய நல்லதொரு வாய்ப்பைப் பெற்றமைக்கு மகிழ்ச்சி அடைகிறேன், பெருமை அடைகிறேன். வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கக்கூடிய தொழிற்சங்கத்தின் நிர்வாகிகளுக்கும், இங்கே வந்திருக்கக்கூடிய உங்கள் அத்தனை பேருக்கும் நான் இதயப்பூர்வமான நன்றியை, வணக்கத்தை நான் முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இராணுவ வீரர்களுக்கும், காவல் துறையினருக்கும் சீருடை இருப்பதைப் போல கழகத்தில் கருப்பும், சிவப்பும் கலந்திருக்கக்கூடிய சட்டை, பேண்ட் சீருடையாக அணிந்து இங்கு வந்து கலந்துக் கொண்டிருக்கக்கூடிய தொழிலாளர் தோழர்களை நான் பார்க்கிறேன். கம்பீரமாக காட்சி அளித்துக் கொண்டிருக்கக்கூடிய இந்த காட்சியைப் பார்க்கிறேன். இப்படிப்பட்ட ஒரு காட்சியைப் பார்க்கிறபோது, அத்தனை பேருக்கும் எழுச்சியும், உணர்ச்சியும் நிச்சயமாக ஏற்படும், அதுவும் எங்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.5.2023) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் 25வது பொதுக்குழுக் கூட்டம் மற்றும் பொன்விழா மாநாட்டில் கலந்து கொண்டு விழா பேருரையாற்றினார். உடன் கழகப் பொதுச் செயலாளரும், நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன், கழக முதன்மைச் செயலாளரும்,நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு. கழக துணை பொதுச் செயலாளரும். உயர்கல்வித் துறை அமைச்சருமான முனைவர் க. பொன்முடி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் .பி.கே. சேகர்பாபு, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் பொதுச் செயலாளர் மு. சண்முகம் எம்.பி., பொருளாளார் கி.நடராசன் மற்றும் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் நிர்வாகிகள் உள்ளனர்.

### தொ.மு.ச. வரலாறு!

அத்தகைய தொழிலாளர் தோழர்கள் கூடியுள்ள 25ஆவது பொதுக்குழுக் கூட்டம் மற்றும் பொன்விழா மாநாட்டில் எனக்கும் கலந்து கொள்ளக்கூடிய வாய்ப்பை தந்திருக்கக்கூடிய இந்த நேரத்தில் இந்த தொழிற்சங்கத்தினுடைய, இந்த தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையினுடைய வரலாற்றுச் சம்பவங்களையெல்லாம் வரவேற்புரையாற்றிய நம்முடைய சண்முகம் அவர்களும், பொதுச் செயலாளர் அவர்களும், முதன்மைச் செயலாளர் அவர்களும் இங்கே தெளிவாக குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

சிந்தனைச் சிற்பி சிங்கார வேலர் 1923ஆம் ஆண்டு மே நாளை கொண்டாடியதைத் தொடர்ந்து இந்த ஆண்டு மே நாள் நூற்றாண்டைக் கொண்டாடியிருக்கிறோம். அத்தகைய நூற்றாண்டில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக உருவான நமது திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணை அமைப்பாக விளங்கும் இந்த தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையினுடைய பொன்விழா காண்பது நமக்கெல்லாம் பெருமை கொள்ளக்கூடிய ஒன்றாக அமைந்திருக்கிறது.

தொழிலாளர் அணியோடு எனக்கு எப்போதும் ஒரு நட்பு கலந்த ஒரு மோதல் ஒன்று உண்டு. மோதலும் சொல்லலாம், ஊடலும் சொல்லலாம். ஆனால் மோதலாக இருந்தாலும், ஊடலாக இருந்தாலும் எப்போதும் உங்களுடன் நான் கூடலாகத்தான் இருப்பேன். என்ன மோதல், கூடல் எனச் சொல்கிறானே என்று சிலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம், என்ன என்று ஒரு கேள்வி கூட எழுந்திருக்கலாம்.

இன்றைக்கு அறிவாலயம் தலைமைக் கழகத்தினுடைய செயலகமாக, கழகத்தினுடைய தலைமைக் கழகமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். தொடக்க காலத்தில் வடசென்னை பகுதியில் இருக்கக்கூடிய ராயபுரத்தில் அறிவகம். அதற்குப் பிறகு அன்பகம். அதற்குப் பிறகு அறிவாலயத்தைக் கட்டி முடித்ததற்குப் பிறகு தலைமைக் கழகம் அன்பகத்திலிருந்து அறிவாலயத்திற்கு

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

## தமிழ்நாடு அரசின் சட்டம் செல்லும்!

# ஜல்லிக்கட்டுக்கு தடையில்லை!

### உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு பரபரப்பு தீர்ப்பு!

புதுடெல்லி, மே 20–

ஜல்லிக்கட்டுப் போட்டிகளை நடத்த அனுமதி அளிக்கும் தமிழ்நாடு அரசின் சட்டம் செல்லும் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டு போட்டிகளுக்கு தடையில்லை என்றும் நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.



தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டுப் போட்டிகளை நடத்த அரசு சிறப்பு சட்டம் இயற்றியது. இந்த சட்டத்திற்கு எதிராகவும், விலங்குகளை மையமாகக் கொண்ட விளையாட்டுகளுக்கு தடைவிதிக்க வேண்டும் எனவும் பீட்டா உள்ளிட்ட அமைப்புகள் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தன. நீதிபதி கே. எம்.ஜோசப் தலைமையிலான 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வில் இந்த வழக்குகள் விசாரிக்கப்பட்டன. இறுதி விசாரணை கடந்த டிசம்பர் 8ஆம் தேதி முடிவடைந்த நிலையில் நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கப்பட்டது. அதன்படி, தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டு போட்டிகளுக்கு தடையில்லை என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள் ளது. ஜல்லிக்கட்டுப் போட்டிகளை நடத்த அனுமதி அளிக்கும் தமிழ்நாடு அரசின் சட்டம் செல்லும் என்றும், ஜல்லிக்கட்டு சட்டத்தை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுவதாகவும் 5 நீதிபதிகளை கொண்ட அரசியல் சாசன அமர்வு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினை வழங்கியது. ஜல்லிக்கட்டு தமிழ்நாடு கலாச்சாரத்தின் ஒரு பகுதி என்பதை ஏற்பதாகவும், ஜல்லிக்கட்டு சட்டத்துக்கு அரசியல் சாசன ஒப்புதல் அளித்தும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் ஜல்லிக்கட்டு போட்டிகள் குறித்து அரசு தாக்கல் செய்த ஆவணங்கள் திருப்தியாக உள்ளதாகவும்,

கலாச்சாரத்தின் அடையாளம் என்று அரசு சட்டம் இயற்றியுள்ள நிலையில் நீதித்துறை அதில் தலையிட முடியாது என்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்துள்ளனர். ஜல்லிக்கட்டு வழக்கில் உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வின் 5 நீதிபதிகளும் ஒருமித்த தீர்ப்பை வழங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜல்லிக்கட்டுக்கு உச்ச நீதிமன்றத்தின் அரசியல் சாசன அமர்வு அளித்துள்ள ஒப்புதல் என்பது, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசின் சட்டப்போராட்டத்திற்கு கிடைத்துள்ள வெற்றி என்று சட்டத்துறை அமைச்சர் ரகுபதி தெரிவித்துள்ளார். தீர்ப்பு வெளியானதும் டெல்லி உச்சநீதிமன்ற வளாகத்தில் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் ரகுபதி, தமிழ்நாடு அரசு சிறப்பான வழக்கறிஞர்களை அமர்த்தி வாதிட்டு தமிழ்நாட்டின் பாரம்பரியத்தை நிலைநாட்டி இருப்பதாகவும் தெரிவித்தார்.

ஜல்லிக்கட்டு போட்டிகளுக்கு தடையில்லை என்ற உச்சநீதிமன்ற தீர்ப்பை பட்டாசு வெடித்து தமிழ்நாடு முழுவதும் பொதுமக்கள் மற்றும் மாடுபிடி வீரர்கள் கொண்டாடினர்.

ஜல்லிக்கட்டுப் போட்டி நடத்த தடையில்லை என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதற்கு, தமிழ்நாடு அரசின் சட்டப்போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி என தி.மு.க. தொண்டர்கள் தெரிவித்துள்ளனர். இந்நிலையில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் தொண்டர்கள் பட்டாசு வெடித்தும், இனிப்புகள் வழங்கியும் உச்சநீதிமன்ற தீர்ப்பை வரவேற்றனர். அமைச்சர் பொன்முடி, தி.மு.க அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மாவட்டச் செயலாளர் சிற்றரசு மற்றும் தி.மு.க நிர்வாகிகள் பட்டாசு வெடித்தும், இனிப்பு வழங்கியும் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

### மொரீசியஸ் ஜனாதிபதி குமரிக்கு வருகை!

கன்னியாகுமரி, மே 20-

மொரீசியஸ் நாட்டு ஜனாதிபதி பிருத்விராஜ் சிங் ரூபன், அவரது மனைவி சயுக்தா ரூபன் ஆகியோர் 2 நாள் பயணமாக கன்னியாகுமரிக்கு வந்தனர். அந்நாட்டு பிரதமர் பிரவிந்த் ஜகநாத்தின் தாயார் சரோஜினியும் வந்தார். குமரி மாவட்ட எஸ்.பி.ஹரி கிரஷ் பிரசாத் பூங்கொத்து வழங்கி வரவேற்றார். மாலை 6 மணியளவில் கார் மூலம் கோவளம் சூரிய அஸ்தமன பகுதிக்கு சென்றனர். அங்கு சூரிய அஸ்தமனத்தை கண்டு ரசித்தனர்.

நேற்று முன்தினம் அதிகாலை முக்கடல் சங்கமம் பகுதிக்குச் சென்று சூரிய உதய காட்சியையும், பின்னர் படகு மூலம் விவேகானந்தர் நினைவு மண்டபம் மற்றும் திருவள்ளுவர் சிலையையும் மொரீசியஸ் ஜனாதிபதி சுற்றி பார்த்தார்.

## டி.கே.சிவக்குமார் துணை முதல்வர்!

# கர்நாடக முதல்வராக சித்தராமையா தேர்வு!

### இன்று பதவியேற்பு! முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்பு!

புதுடெல்லி, மே 20-

கர்நாடக மாநிலத்தின் முதலமைச்சராக சித்தராமையாவும், துணை முதலமைச்சராக டி.கே.சிவக்குமாரும் பதவியேற்பார்கள் என காங்கிரஸ் கட்சி சார்பில் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த பதவியேற்பு விழாவில் காங்கிரஸ் அழைப்பை ஏற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொள்கிறார்.

கர்நாடக சட்டசபை தேர்தலில் காங்கிரஸ் 135 இடங்களில் வெற்றி பெற்று தனிப்பெரும்பான்மை பெற்றது. அதன்பின்னர், கர்நாடக முதலமைச்சரை தேர்வு செய்யும் பணிகள்



தீவிரமாக நடைபெற்றது. அதன்பின்னர், கர்நாடக மாநில முதலமைச்சராக சித்தராமையா தேர்வு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. காங்கிரஸ் பொதுச்செயலாளர் கே.சி.வேணுகோபால், கர்நாடக மாநில பொறுப்பாளர் ரன்தீப் சிங் சுர்ஜேவாலா ஆகியோர் டெல்லி காங்கிரஸ் தலைமை அலுவலகத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தனர். அப்போது பேசிய அவர்கள், கர்நாடகாவின் முதலமைச்சராக சித்தராமையாவும், துணை முதலமைச்சராக டி.கே.சிவக்குமாரும் இன்று (20ம் தேதி) 12.30 மணிக்கு பதவியேற்பார்கள் என்று தெரிவித்தனர். கர்நாடக மாநில காங்கிரஸ் தலைவராக டி.கே.சிவக்குமார் தொடர்வார் என்றும் அறிவித்தனர்.

இதனிடையே, பெங்களூருவில் நேற்று முன்தினம் இரவு 7.30 மணிக்கு காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் கூட்டம் நடைபெற்றது. ஆளுநரைச் சந்தித்து ஆட்சியமைக்க சித்தராமையா உரிமை கோர உள்ளார்.

### கர்நாடக மாநில முதலமைச்சர் பதவி ஏற்பு விழாவில்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்க அழைப்பு!

### மல்லிகார்ஜுன கார்கே – சித்தராமையா தொலைபேசியில் பேசினர்.

**சென்னை, மே 20 -**

**பெங்களூரில் நடைபெறவுள்ள கர்நாடக மாநில முதலமைச்சர் பதவியேற்பு விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்திட அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே மற்றும் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சித்தராமையா ஆகியோர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தொலைபேசி வாயிலாக அழைப்பு விடுத்துள்ளனர்.**

கர்நாடக மாநில பொதுத் தேர்தலில் அகில இந்திய காங்கிரஸ் கட்சி பெரும்பான்மை இடங்களைப் பிடித்து வெற்றி பெற்றதையடுத்து, கர்நாடக மாநில முதலமைச்சராக சித்தராமையா அவர்கள் இன்று ( 20.5.2023 ) பதவியேற்கவுள்ளதால், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே மற்றும் சித்தராமையா ஆகியோர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (18.5.2023) தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு இன்று ( 20.5.2023 ) பெங்களூரில் நடைபெறவுள்ள பதவியேற்பு விழாவிற்கு வருகை தந்து சிறப்பிக்குமாறு அழைப்பு விடுத்தனர்.